**மினுவாங்கொட நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மினுவாங்கொட நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மினுவாங்கொட நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கீட்டு நியம இலக்கம் 3.2 இன் கீழ் கணினி மென்பொருள் சொத்தாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்ட போதிலும் வருமானக் கூற்றிலும் நூலகத்தில் பயன்படுத்தப்படுகின்ற கணனி | 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மென்பொருள் இரண்டினதும் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுச் சந்தை அருகில் வடிகாண் முறைமையை தயாரிப்பதற்காக ரூபா 317,713 நடைமுறை வேலையாக கட்டிடத்தின் கீழும், வீதியின் கீழ் இரு தடவை கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக நடைமுறையல்லா சொத்துக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த 05 வீதிகளின் நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 488,433 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 48,843 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | பெறுமதி ரூபா 189,000 ஆன டிறக்டர் டிறெயிலர், மோட்டார் வாகனத்தின் கீழ் கணக்கீடு செய்யும் போதும் பொதுக் களஞ்சிய கணக்கிலும் உள்ளடக்கப்பட்டமையால் களஞ்சிய இருப்புக் கணக்கு அப்பெறுமானத்தால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 5,388,056 செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஹதிரம சந்தி மலசலகூட முறைமை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | இயந்திரம் மற்றும் பொறிகள் உபகரண இயந்திரம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூபா 27,513 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | சொத்துக்களிலிருந்து அகற்றப்படுகின்ற ஆண்டிற்காக முழுமையான வருடத்திற்காகவும் பெறுமானத்தேய்வு செய்தல் சபையின் பெறுமானத்தேய்வு கொள்கையாக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் அகற்றப்பட்ட ரூபா 372,267 தொகையான 02 டிறெயிலர்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் உரிய பெறுமானத்தேய்வுரூபா 14,891 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | நாட்குறிப்பு பதிவின் மூலம் பிழைகளை சரி செய்தலாக ரூபா 300,630 ஆன தளபாட கணக்கில் வரவு வைக்கப்பட்ட போதிலும் அது முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட இயந்திரம் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ஆனமையால் தளபாட கணக்கின் மீதி ரூபா 300,630 தொகையும், தளபாடம் பெறுமானத்தேய்வு கணக்கின் மீதி ரூபா 22,547 தொகையும் அதிகரித்து | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 82,274 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் முதலீடு மற்றும் நிதி செயற்பாடுகளில் உருவான தேறிய காசுப்பாய்ச்சலின் கூட்டுமொத்தம் ஆண்டின் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் தேறிய அதிகரிப்பிற்கு / குறைவிற்கு சமனாக இருக்க வேண்டிய போதிலும் தயாரிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாடுகள், முதலீடுகள் மற்றும் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவான தேறிய பெறுமதி காசுப்பாய்ச்சலின் கூட்டுமொத்தம் ரூபா 165,322,846 ஆகவும், காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு ரூபா 9,448,096 ஆகவும் இருந்தமையால் ரூபா 155,874,750 வேறுபாடு காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் மூலம் சரிசெய்யப்படுமென அறியத் தருகின்றோம். | சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட தளபாடக் கணக்கின் மீதி ரூபா 6,684,449 தொகை உபயோக பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 6,364,582 தொகை ஆனமையால் அந்த மீதிகளுக்கிடையே ரூபா | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்யப்படுமென அறியத் தருகின்றோம். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை ஒப்பீடு செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| 440,837 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 22,083,743 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,039,859 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ஆதனவரி பெறுமதியில் ரூபா 50,000 இனை விஞ்சியிருந்த ஆதனவரி அலகுகள் 47 இற்காக அறவிட வேண்டிய நிலுவை ஆதனவரி பெறுமதி ரூபா 3,950,735 ஆகும். | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 2.2.2 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்காக புதிய வாராந்த சந்தை வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் 04 தினங்களுக்கு சமமான தொகையான ரூபா 885,000 சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் மிகுதி பெறுமதிக்கு சமமான ஆதன பிணை / வங்கிப் பிணை / காப்புறுதி மேவுகை என்பன சபைக்கு வழங்குவதற்கு இரண்டாவது தரப்பினர் இணக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பிணையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>கொரோனா தொற்று நிலைமையின் அடிப்படையில் 2021 சனவரி 31 | நிலுவைப் பணத்தை பிணை வைப்பிலிருந்து கழித்து கேள்விதாரரின் தமது கறுப்பு பட்டியலில் இடுவதற்கும் மிகுதி காலத்திற்காக நகர சபையின் மூலம் வாராந்த சந்தை கட்டணத்தை அறவிடுவதற்கும் குழு தீர்மானித்திருந்ததை அறியத் தருகின்றோம். | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் 2021 பெப்ரவரி 07 என்ற 02 தினங்களுக்காக வரிச் சலுகை வழங்க முடியாதிருந்ததாக 2021 மார்ச் 09 ஆந் திகதி சபை தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வாடகையாளரால் வாராந்த சந்தை நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டு கேள்வியை இரத்துச் செய்யுமாறு கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த 02 தினங்களுக்காக பாதுகாப்பு பிணைத் தொகையில் மொத்தப் பணம் ரூபா 442,500 குறைக்கப்பட்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 221,250 மாத்திரம் கழிக்கப்பட்டு ரூபா 663,750 தொகை கேள்விதாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 5,388,056 கொடுப்பனவு செய்து ஹதிரம சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூட முறைமைய 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 04 வருடங்களுக்கு அண்மித்த காலம் பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படாதிருக்கும் போது சுற்றுலாவை கவரும் வியாபார நிலையமொன்று மற்றும் தங்குமிட வசதிகளுடன் ஓய்வு நிலையமொன்றை தாபிக்கும் செயற்திட்டத்திற்காக ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட்டு இந்த | மலசலகூட முறைமையை அகற்றுவதற்கு ஆளுனரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு கோரப்பட்டிருந்ததுடன் இதுவரை அங்கீகாரமோ அல்லது பரிந்துரையோ சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மீண்டும் ஒரு தடவை இது தொடர்பாக ஆளுனருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். | நிர்மாணங்கள் நகர அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

மலசலகூட முறைமை அகற்றுவதற்கு 2021 மார்ச் 09 ஆந் திகதி பொதுச்சபைக் கூட்டத்தின் போது முன்மொழியப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட தொகை முகாமைத்துவத்தில் காணப்பட்ட தீர்மானம் எடுக்கும் நலிவினால் ஏற்பட்ட பயனற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மினுவாங்கொட கொழும்பு வீதியில் ஹம்பகஹவத்த காணியில் மூன்றுமாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு சங்கமொன்றுடன் உடன்படிக்கை செய்திருந்த போதிலும் இதற்காக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் செயற்திட்ட அறிக்கை மற்றும் மொத்தக் கிரய மதிப்பீடும் அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. இந்த செயற்திட்டத்தின் I கட்டத்தில் மூன்று மாடிக் கட்டிடத்தின் அத்திவாரத்தை அமைப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட தொகை ரூபா 2,355,303 ஆக இருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.9.4 ஆம் பிரிவிற்கு முரணாக சங்கமொன்றை தெரிவு செய்து கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது. மொத்த கிரயத்தின் பிரகாரம் இந்த நிர்மாணத்திற்குரிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.5 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்மாண வேலைகள் அபிவிருத்தி அதிகார சபையின் நிர்மாண | திட்டமிடல் குழுவின் மூலமும் திட்டத்திற்காக உறுதிப்படுத்தி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. வேறொரு தரப்பினர் மூலம் தடைக் கட்டளையை பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் காணப்படுகின்ற சட்டரீதியான நிலைமையின் அடிப்படையில் நிர்மாணங்களை கைவிட வேண்டியிருந்தது என அறியத் தருகின்றோம். | மொத்த கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பிரச்சினைகளை தீர்த்து வைத்து செயற்திட்டத்தை ஆரம்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் ஒப்பந்த நிபந்தனை மற்றும் மாதிரிகளின் பிரகாரம் உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நிர்மாண செயற்பாடுகள் 2019 ஆம் ஆண்டின் போதும் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் சபைக்குரிய அந்த காணியின் பாதுகாப்பு தொடர்பாக சபை நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் நீதிமன்ற கட்டளையின் அடிப்படையில் இடைநடுவதில் நிறுத்த வேண்டியேற்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டின் போது வாராந்த சந்தை நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 10,118,651 தொகை எந்தவொரு சொத்தும் சபைக்கு உழைக்கப்படாத பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்ததுடன் ஆக்கபூர்வமான செயற்திட்டம் தொடர்பாக சரியான ஆய்வு மேற்கொண்டு செயற்திட்டத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திறந்த கட்டிடம் ஒன்றை அகற்றுவதற்கு ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தில் இருந்து அகற்றப்படுகின்ற பகுதிகளில் ஒரு பகுதி சபையின் வாகன தளத்தின் கூரையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மிகுதி பகுதிகள் பாதுகாப்பாக வாராந்த சந்தை வளவில் வைக்கப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம். | செயற்திட்டங்களை திட்டமிடல் நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) | மினுவாங்கொட பழைய பேரூந்து நிலையத்திற்கு அருகில் உத்தேச வீதிக்கு கொங்கிறீட் இடும் வேலை 2021 செப்தெம்பர் 16 ஆந் திகதி 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்காக ரூபா 1,618,136 தொகையில் சமூக சபையொன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2022 சனவரி 11 ஆந் திகதி 10 சதவீத நிறுத்தி வைத்தல் | தொழில்நுட்ப உத்தியோகத்தரால் அறிக்கையிடப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் நிறுவனத்தின் மூலம் ABC தட்டின் தடிப்பு, கொங்கிறீட் தட்டின் கனம், மற்றும் கொங்கிறீட் தட்டின் உள்ளடக்கும் சக்தி என்பவற்றை பரீட்சித்தல் பொருத்தமாக மேற்கொள்ளப்பட | நிர்மாண செயற்திட்டங்களின் போது தரக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்து வதற்காக கட்டுப்பாட்டுத் திட்டம் தாபிக்கப்படல் வேண்டும். |

குறைக்கப்பட்டு ரூபா 1,093,607 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. வீதி நிர்மாணத்தின் பிரச்சினைகளை பரீட்சிப்பு மூவரையுடைய பரிசோதனை சபையொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் அறிக்கையின் பிரகாரம் ABC இடுவதற்கான உயரம் 1 அடிக்கு மொத்த வீதிக்கும் தேவையான மொத்த கியூப் அளவு 50.5 கியூபாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் குழு அறிக்கையின் பிரகாரம் உயரம் 4 அங்குலம் மற்றும் கியூப் 25.0 ஆக ஈடுபடுத்தப்பட்டமையால் இந்த வீதி குறித்துரைத்த நியமத்தில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2022 ஏப்ரல் 04 ஆந் திகதி சபை செயலாளரின் அறிக்கையின் படி கொங்கறீட் இடப்பட்ட பகுதியின் மேற்பகுதியில் சில இடங்கள் பழுதடைந்திருந்தமையும் அதில் பழுதுபார்த்தலை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 15 ஆந் திகதி வரையிலும் அந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையின் அறிக்கையிடப்பட்ட முறையில் கொடுப்பனவு செய்வதற்கு பொதுச் சபையின் அங்கீகரித்திருந்தது. வீதிகளின் பழுதுகளை அவதானிக்கப்பட்டமையால் அதனை திருத்துவதற்கு ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் திருத்தங்கள் இதுவரை மேற்கொள்ளப்படா மையால் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் வீதியின் நிலைமை தொடர்பாக மீண்டும் அறிக்கையிட முடியுமென அறியத் தருகின்றோம்.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருமான பரிசோதகரின் வெற்றிடத்தினால் 11 பிரிவுகளில் நிலுவை வருமானத்தை அறவிடுவதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தது. | வருமான பரிசோதகர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | ஊழியர் பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |